1972 மார்ச் 29]

திரு. ஏ.எம். இராஜா : கச்சத் தீவு விவகாரம் இந்திய அரசின் ஆய்வில் இருப்பதாக முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஆய்வு முடியும் வரை இலங்கை அரசு அந்தக் கச்சத் தீவின் பக்கம் அதனுடைய படைகளை அனுப்பாமல் இருக்க இந்திய அரசு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்ளு வதற்கு நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதுகூட அங்கே நடை பெறுகிற புதிய அந்தோணியார் திருவிழாவிற்கு இந்தியாவிலிருந்துதான் பாதிரியார்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி இலங்கையி லிருந்தும் வருகிறார்கள். யாருக்குச் சொந்தம் என்று நிர்ணயிக்கப்படாமல் இருக்கிறது. யாருக்குச் சொந்தமாக இருக்கக் கூடும் என்பதற்குப் பல்வேறு ஆதாரங்களை, இராமநாதபுரம் இராஜா காலத்திலிருந்து உள்ள ஆதாரங்களை யெல்லாம் நாமே திரட்டி வைத்திருக்கிறோம். அந்த அடிப் படையில்தான் இந்திய அரசு இலங்கை அரசோடு பேசி ஒரு சுமுகமான தீர்வுக்கு வர வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கச்சத் தீவுக்கு ஆண்டுதோறும் புனித அந்தோணியார் கோவிலுக்குத் ஏராளமான ஆட்கள் தமிழ்நாட்டில் இருந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன உதவியை இந்த அரசு அளிக்கும் என்று முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்று வருவதற்கான உதவி அளிக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்தக் கச்சத்தீவு ஜமீன் ஒழிப்புக்கு முன்பாக இராமநாதபுரம் மாமன்னரின் ஆளுகைக்கு உட் பட்டு அங்கே அடிக்கடி அவர்கள் சென்று, அவர்கள் தங்கள் அனுபோகத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்று தமிழக அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவைகளெல்லாம் தெரிந்த காரணத்தால் தான், இதைவிட இன்னும் பல ஆதாரங்களின் அடிப் படையில் இதற்கு நல்ல தீர்வினை, அமைதியான சூழ்நிலையில் காண வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக் கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, கச்சத்தீவு கடத்தல்காரர் களின் சொர்க்கம் (ஸ்மக்ளர்ஸ் பேரடைஸ்) என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா !

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடத்தல்காரர்கள் சொர்க்கத்திற் குப் போவதாகக் கேள்விப்படவில்லை. .இருந்தால், நரகத்திற்குத்தான் போவார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தக் கச்சத்தீவின் நிலைமை களை நேரில் பரிசீலித்து வர, தமிழக சட்டப் பேரவைக் குழு ஒன்றை அனுப்பி வைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது முழுக்க முழுக்க மத்திய அரசின் பிரச்சனை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, கச்சத்தீவு இந்தியாவுக்கு உரிமையாக்கப்பட்டதற்குப் பின்னாலே, தனி மாநிலமாகத் திகழுமா, அல்லது தமிழக மாநிலத்தோடு இணைந்து இருக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னும் திருமணம் நடைபெறவில்லை.

Arrack

*765 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Co-operative Marketing Federation was requested by the Government during 1971 to procure arrack from other States ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் மைசூர் மாநிலத்திலிருந்து சாராயத்தைப் பெற்று, அதனை மைசூர் மாநிலத்தில் செலுத்தத்தக்க தீர்வை நீங்கலாக, லிட்டருக்கு 54, 50 காசு என்ற விலையில் சென்னையில் விற்க முன் வந்தது. இந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டது. விற்பனையில் முழுவிவரங்களும் சம்மேளனத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சாராயம் வழங்கத் தொடங்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதன் மூலமாகச் சர்க்காருக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் ? சர்க்கார் விற்கும் விற்பனை விலை ரூ. 4 ஒரு லிட்டர் என்றும், ஆனால் ரூ. 10 ஒரு லிட்டர் என்று விற்கப் படுகிறது என்பது தெரியுமா ? இதனால் அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது என்பது தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது வேண்டுகோள் அளவில் வந்து, அரசு ஏற்றுக் கொண்ட நிலையில் இருக்கிறது. அதனுடைய தொடர்பான பணி ஆரம்பிக்காத காரணத்தால் லாப, நஷ்டக் கணக்குச் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஆண்டு டிஸ்டில்லரீஸ் கோவாபரேடிவ் சர்க்கரை ஆலை அரணுவுக்கும், தனியார் ஆலை ஒன்றுக்கும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரியாகக் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்த டிஸ்டில்லரீஸ் ஏற்பாடு செய்தால் இறக்குமதி செய்ய அவசியம் இருக்காது அல்லவா, அம்மாதிரி ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவைகளைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. எந்த முடிவும் எடுக்கவில்லை.

1972 மார்ச் 29]

திரு ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, சாராயம் காய்ச்சுவதற்கு ஆல்கஹால் அதிகமாகப் பயன்படுவதால், ஆல்கஹாலைப் பயன்படுத்துகிற பிளாஸ்டிக் போன்ற தொழில்களுக்கு ஆல்கஹால் கிடைக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறதா ? அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு சில புகார்கள் வந்தன. அதைத் தடுப்பதறகு ஏற்ற நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம். இம் மாநிலத்தில் சாராவித் தேவைகளை ஈடுசெய்வதன் பொருட்டு மைசூர், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தூய்மைபடுத்தப் பட்ட சாராவி இறக்குமதிக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உத்திரப் பிரதேசத்திலிருந்து 11·5 லட்சம் தூய்மைப்படுத்தப்பட்ட சாராவி வந் துள்ளது. மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் தருவதற்கு முயற்சி கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, நாம் உள்நாட்டில் தயாரிக்கும் சாராயத்தின் அடக்கவிலை, உற்பத்தி செலவு ரூ. 3·50. அதை, ரூ. 10 விற்கப்படுகிறதே, இரண்டு மடங்கு அதிகப்படியான விலைக்கு விற்கப்படுகிறதே, இது ஏழைகளைப் பாதிக்காதா என்பதற்கு அமைச்சர் பதில் சொல்வாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விலை அதிகமாகிவிட்டால் ஏழை கள் அதைச் சாப்பிடாமல் இருந்து பாதிக்கப்படாமல் இருப்பார்கள்.

*766. வினு—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்துகீழ்க் கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சாராயம் காய்ச்சும் தொழிற்சாலை அமைத்திட தனியார் நிறுவனங்கள் எவற்றிற்கேனும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சாராய உற்பத்திக்கான மூலப் பொருள்கள் தேவையான அளவுக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டிலே கிடைக்கின்றன.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை யிலே இருந்து அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் ஏதேனும் வந்ததா ? அப்படி விண்ணப்பங்கள் வந்தால் அதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே ஒரு கேள் விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. வந்தால் அதுபற்றி யோசித்துத் தான் முடிவு எடுக்க வேண்டும்.

[1972 மார்ச் 29

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, சாராயம் தயாரிப்பதற்கு அரசாங்கமே ஒரு தொழிற்சாலை துவக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, முந்திரிப் பழத்திலே தயார் செய்யப்படுகிற ஃபேனி என்ற ஒரு வகை மது மிக வீரியம் உள்ளதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை கோவா போன்ற இடங்களில் நிறையப் பேர் வாங்கி அருந்துகிறார்கள். தமிழகத்திலே நிறைய முந்திரி இருப்பதால், ஃபேனி தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முந்திரியிலிருந்து இது போன்ற மது தயாரிப்பதற்கு சில கோரிக்கைகள், யோசனைகள் பெறப்பட்டு, அது சம்பந்தமாக பல்வேறு இலாக்காக்களும் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன என்ற இந்த அவையில் இரண்டொரு நாட்களுக்கு முன்பு விரிவான பதில் ஒன்றைச் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, திருச்சி நகரத்தில் உள்ள தனியார் சாராயம் காய்ச்சும் தொழிற்சாலையின் கழிவு நீர், குடிக்கும் நீரில் கலந்து கெட்டுவிட்டதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்ததா ? அப்படியானால் அந்தத் தொழிற்சாலையை வேறொரு இடத்திற்கு அகற்றுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புகார் வந்தது. ஆனால் உடனடியாகத் தொழிற்சாலையை இன்னொரு இடத்திற்கு மாற்றிவிடுவது என்பது எளிதான காரியம் அல்ல. அந்தத் தண்ணீர் கெடாமல், துர்நாற்றம் வராமல் இருப்பதற்காக என்னென்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாக நம்முடைய இண்டஸ்டிரீஸ் டிபார்ட்மெண்டார் அந்த நிறுவனத்தாரிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மோகனூர் கரும்பாலையில் உண்டாகும் கழிவுப்பாகைக் கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு ஆலையில் சாராயம் காய்ச்சுவதற்கு அரசு அனுமதி கொடுக்குமா ? மோகனூர் ஆலையிலிருந்து இது பற்றி தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றி தனியாகக் கேள்வி எழுதினால், பதில் சொல்வதற்கான தகவல்களை நான் பெற முடியும்.

திரு. எ. எம். இராஜா : தலைவரவர்களே, கேஷூனட்டிலிருந்து ஃபேனி என்ற மது செய்வதற்கான ஆதாரங்களை எல்லாம் சேகரித்துக் கொண்டு இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே போல் கோகனட் ஃபேனி (தேங்காயிலிருந்து செய்வதற்கு) அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?